**செய்தி வெளியீடு** **நாள் : 10.01.2026**

**நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொளத்தூர் ஏரி பூங்கா சேவை சாலையின் பணிகளையும், கொளத்தூர், செந்தில் நகரில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலத்தின் பணிகளையும் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் சாலை அகலப்படுத்துதல் ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எ.வ.வேலு அவர்கள் மற்றும் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (10.01.2026) மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் **திரு.எ.வ.வேலு அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் கொளத்தூர்-பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையிலிருந்து வரும் வாகனங்கள் உள்வட்ட சாலையை அடைவதற்கும், கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கும் 600 மீட்டர் நீளம் மற்றும் 7.50 மீட்டர் அகலம் கொண்ட சேவை சாலையின் இருபுறமும் 2.00 மீட்டர் அகலத்திற்கு நடைபாதையும், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, சாலைப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை சார்பில், கொளத்தூர், செந்தில் நகரில் ரூ.15.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் ரூ.155.35 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மேம்பாலம் அகலப்படுத்துதல் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கொளத்தூர் **பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தையும்** மற்றும் கொளத்தூர் ஜி.கே.எம். காலனியில் அமைந்துள்ள **குளக்கரை பூங்காவையும்** மாண்புமிகு அமைச்சர்கள் **திரு. எ.வ.வேலு அவர்கள்** மற்றும் **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னை தீவுத்திடலில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக பேருந்து நிலையத்தின் பணிகளை ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் (பெருநகரம்) திரு.ஜவகர் முத்துராஜ், (கட்டுமானம் & பராமரிப்பு) திரு.சத்தியபிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர் திரு.சரவணசெல்வன், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, எம்.டி.சி. இணை மேலாண் இயக்குநர் திரு.சுந்தரபாண்டியன், பொது மேலாளர் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திரு.நாகராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™